**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.61 of 2023**
**Prosecution Witness**:PW1

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வராஜ் (PW1) | | |
| Father's Name | ராமசாமி | | |
| Village | மேட்டுப்பாளையம் | | |
| Taluk | | | |
| District | கோவை மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். விபத்தில் அடிபட்டு காலமான தினேஷ்குமார் என் மகன். 06.01.2023 தேதி அன்று நானும் என் மகன் தினேஷ்குமார் இருசக்கர வாகனத்தில் வரும்போது சுமார் மாலை 6.30 மணி அளவில் அன்னூர் டு அவிநாசி ரோட்டில் வெள்ளியம்பாளையம் பழக்கடை அருகே என் மகன் இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வந்தேன். எங்களுக்கு பின்னால் வந்த லாரி TN 40 P 4797 என்ற லாரி எங்களுக்கு பின்னால் வந்து வலது பக்கம் மோதி அதில் என் மகன் தூக்கி வீசப்பட்டு என் மகன் லாரிக்கு உள்ளேயும், நான் ரோட்டிற்கு இடது பக்கமும் கீழே விழுந்து விட்டோம். என் மகனுக்கு நெஞ்சில் அடிபட்டு ரத்தக் காயம் ஏற்பட்டது. என் மகனை அருகில் இருந்தவர்கள் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலம் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். மருத்துவர் என் மகனை பரிசோதித்து விட்டு என் மகன் காலமாகி விட்டதாக சொன்னார்கள். இந்த விபத்திற்கு லாரி கவனக்குறைவாக ஏறி வந்ததால் தான் விபத்து நடைபெற்றது. அந்த லாரியை ஓட்டி வந்தவர் கந்தசாமி என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். மேற்படி விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு போலீசார் என் மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் நான் உடனிருந்து என் மகனின்

பெயரிடத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தனர். விபத்து நடந்த சமயத்தில் நான் எதிரியை பார்க்கவில்லை அதன் பின்னிட்டு விசாரித்து தெரிந்து கொண்டேன். ஆஜரில் உள்ள எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் எழுதவில்லை. நான் சொல்ல வேறு ஒரு நபர் எழுதினார். நான் சொல்ல வேறு ஒரு நபர் புகாரை எழுதினார் என்ற விபரம் புகாரில் இல்லை என்றால் சரிதான். டிஎன் 39 4599 வாகனத்தில் சென்றோம் என்று நினைக்கிறேன் வாகனத்தின் எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு வளைவான பகுதி (எஸ் வடிவில்) என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் பழக்கடைக்கு முன்னரும் பின்னரும் வேகத்தடை உள்ளது என்றால் இல்லை பல கடை தாண்டி 400 மீட்டர் தொலைவில் தான் வேகத்தடை இருக்கும். பழக்கடை தாண்டி 20 அடி தூரத்தில் வேகத்தடை உள்ளது என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம் அணிந்திருந்தோமா என்றால் என் மகன் அணிந்திருந்தார் நான் அணியவில்லை. தலைக் கவசம் அணிந்திருந்த விபரத்தை நான் புகாரிலோ போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் என் மகன் இறந்த பதற்றத்தில் சொன்னேனா இல்லையா என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. இருசக்கர வாகனத்தின் எந்த இடத்தில் லாரி மோதியது என்ற விபரம் புகாரில் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் மகனுக்கு லாரியின் எந்த பகுதியும் மோதி அடிப்படவில்லை என்றும் கீழே விழுந்ததில் தான் அடிபட்டுள்ளது என்றால் சரியல்ல என் மகனையும் இருசக்கர வாகனத்தையும் சேற்றி லாரி 5, 6 அடி தூரத்திற்கு இழுத்துச் சென்றதால் தான் என் மகனுக்கு நெஞ்சில் பலத்த காயம் ஏற்பட்டது. மேற்சொன்னவாறு விபத்து நடத்துனர் நான் என் புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணை கிலோ சொல்லியிருப்பேன் என்றும் தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியும் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்றும் அதில் வேகத்தடை உள்ளதால் லாரி மெதுவாக தான் சென்றது என்றும் என் மகன் தான் லாரியை இடது புறமாக ஓவர் டெக் செய்வதற்கு முயற்சித்த போது தான் லாரியின் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகனின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து நடைபெற்ற வேண்டும் லாரியின் ஓட்டுனர் மீது எந்த கவனக்குறைவு இல்லை என்றால் சரியல்ல. நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்து அதில் பணம் பெற்றுக் கொண்டேன். இருசக்கர வாகனத்தில் சென்ற எனக்கு காயம் எதுவும்

ஏற்படவில்லை என்றால் ஏற்படவில்லை.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |